இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 20-09-2023

# ராஜஸ்தானத்து ரணங்கள்

**நீட் தேர்வு தொடர்பாக தமிழ்நாடு தான் தவறான பிரச்சாரம் செய்கிறது என்றும் - மாணவர்கள் அதனால் தான் பலியாகிறார்கள் என்றும் - சிலர் திரும்பத் திரும்பப் பொய் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இதோ இப்போது ராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து வரும் செய்திகள் அந்த மாநிலமும் ரணகளமாய் மாறி இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.**

நீட் தேர்வுக்காக பயிற்சி எடுத்துவந்த மாணவர்கள் - கடந்த எட்டு ஆண்டுகளில் இதுவரை 119 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். இந்த ஆண்டு மட்டும் 24 மாணவர்கள் தற்கொலை செய்துள்ளார்கள் என்ற அதிர்ச்சியான தகவலை ராஜஸ்தான் மாநில அரசே வெளியிட்டு இருக்கிறது. சில தனியார் பயிற்சி நிறுவனங்களின் லாபத்துக்காக மட்டுமே இந்த நீட் தேர்வு பயன்படுகிறது என்பதை திரும்பத் திரும்ப நாம் சொல்லி வந்தோம். நீட் தேர்வு எத்தகைய பலி பீடமாக இருக்கிறது என்பதை ராஜஸ்தான் மாநிலமும் சொல்கிறது.

ராஜஸ்தான் மாநிலம் கோட்டா நகரில் ஐ.ஐ.டி. - ஜே.இ.இ. நுழைவுத் தேர்வு, நீட் நுழைவுத் தேர்வு போன்ற போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி அளிக்கும் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு இந்தியா முழுவதும் இருந்தும் மாணவர்கள் வந்து தங்கி பயிற்சி பெறுகிறார்கள். தற்போது 2.25 லட்சம் பேர் கோட்டா நகர் பயிற்சி மையங்களில் பயில்கின்றனர். மருத்துவம் படிக்க விரும்பும் மாணவர்கள் நீட் தேர்வுகளில் வெற்றி பெற வேண்டும். கோட்டா நகரில் நீட் தேர்வுக்கு பயிற்சி தரும் மையங்கள் அதிகம் இருப்பதால் இதனைத் தேடி பலரும் வந்துவிடுகிறார்கள். மனரீதியான நெருக்கடியை இவர்கள் எதிர்கொண்டு வருவது இப்போது முழுமையாக வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.

**2015 ஆம் ஆண்டு 18 மாணவர்கள் -**

**2016 ஆம் ஆண்டில் 17 மாணவர்கள் -**

**2017 ஆம் ஆண்டில் 7 மாணவர்கள் -**

**2018 ஆம் ஆண்டு 20 மாணவர்கள் -**

**2019 ஆம் ஆண்டு 15 மாணவர்கள் -**

**2022 ஆம் ஆண்டில் 15 மாணவர்கள் - தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். இவர்கள் அனைவரும் இந்த பயிற்சி மையங்களில் படித்து வந்தவர்கள். இந்த ஆண்டில் தான் இதுவரை இல்லாத அளவு 25 தற்கொலை மரணங்கள் நிகழ்ந்துள்ளன. ராஜஸ்தான் மாநில அரசு இது தொடர்பாக விசாரணை ஆணையத்தை அமைத்தது. அந்த ஆணையம், இந்த பயிற்சி மையங்கள் அனைத்தையும் முறைப்படுத்த வேண்டும் என்று சொல்லி இருக்கிறது.**

ராஜஸ்தான் மாநில உயர்கல்வி செயலாளர் பவானி தேத்தா தலைமையில் 15 பேர் கொண்ட குழு ஆகஸ்ட் 17 அன்று அமைக்கப்பட்டது. கோட்டாவில் அதிகப்படியான மாணவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் சூழலை ஆராய இது அமைக்கப்பட்டது. கோட்டாவில் உள்ள பயிற்சி நிறுவனங்களில் 7 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களைக் கூட சேர்த்துள்ளதை இக்குழு கண்டுபிடித்துள்ளது. இப்பயிற்சி மையத்துக்கு வரும் மாணவர்கள் படிக்க முடியாமல் வெளியேற நினைத்தால் அவர்களை வெளியேற இந்த பயிற்சி மையங்கள் விடுவது இல்லை என்பதையும் இக்குழு கண்டுபிடித்துள்ளது. எளிதாக வெளியேறுவதையும், அப்படி வெளியேற நினைக்கும் மாணவர்களுக்கு அவர்கள் செலுத்திய பணத்தை உடனடியாக திரும்பத் தர வேண்டும் என்பதையும் இக்குழு பரிந்துரை செய்துள்ளது.

**கட்டாயப்படிப்பே மன அழுத்தம் ஏற்படுத்துகிறது, அந்த மன அழுத்தமே தற்கொலைக்கு காரணம் என்றும் இக்குழு கூறியுள்ளது.** மாணவர்கள் தங்கும் இடங்கள், அதன் உரிமையாளர்கள், விடுதி காப்பாளர்கள் ஆகிய அனைவரையும் கடுமையாக விசாரிக்கவும் கண்காணிக்கவும் வேண்டும் என்று இக்குழு கூறியுள்ளது. ஏழை நடுத்தர குடும்பத்து மாணவர்கள் தற்கொலை செய்து வருவதாக இந்த அறிக்கை சொல்கிறது.

நீட் பயிற்சி மையம் என்பது ரூ.10 ஆயிரம் கோடி வர்த்தகம் என்றும் இந்த ஆணையம் கூறியுள்ளது. **சிலரின் சுயநலத்துக்காக - அவர்கள் ஒன்றிய அரசின் உயரதிகார மையங்களை கையில் போட்டுக் கொண்டு நீட் தேர்வுக் கொள்ளையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது. இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.**

நீட் தேர்வுக்கு எதிராக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் அவர்கள் கடந்த பிப்ரவரி மாதம் கருத்துச் சொல்லி இருந்தார். "அரசின் கொள்கை சார்ந்த முடிவில் நீதிமன்றம் தலையிடாது என்றாலும் மாணவர்கள் கோரிக்கையை ஏற்று மாற்றம் செய்ய வேண்டியது அரசின் கடமை. மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் அதில் தலையிட வேண்டியது நீதிமன்றத்தின் கடமை" என்று பொது நிகழ்ச்சி ஒன்றில் தலைமை நீதிபதி பேசி இருந்தார்.

**"நீட் தேர்வு குறித்த வழக்குகளின் எண்ணிக்கை லட்சக்கணக்கான மாணவர்களின் விருப்பங்களை மட்டும் உணர்த்தவில்லை. மருத்துவக் கல்வியில் சீர்திருத்தம் தேவை என்பதையும் அது குறிக்கிறது"** என்று சொல்லி இருந்தார். வழக்குகள் மட்டுமல்ல மரணங்களும் நீட் தேர்வை அகற்றியே ஆகவேண்டும் என்பதை உணர்த்துகிறது.

தமிழ்நாடு முதல் ராஜஸ்தான் வரை இறந்த உயிர்களின் மீது உறுதி எடுத்து நீட் தேர்வை அகற்றியே ஆக வேண்டும்.

## 6 முதல் 10ஆம் வகுப்புகளுக்கு காலாண்டுத் தேர்வு!

சென்னை, செப். 20–

தமிழக அரசு பாடத் திட்டத்தில் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் படிக்கும் 6 முதல் 10ம் வகுப்பு மாணவர்களுக்கு காலாண்டு தேர்வு நேற்று தொடங்கி வருகிற 27ந்தேதி வரை நடைபெறுகிறது.

மாநில பாடத்திட்டத்தில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் பொதுவான ஒரே வினாத்தாள் முறை மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளது.

அந்தந்த மாவட்ட கல்வி அலுவலகங்கள் மூலம் தயாரிக்கப்பட்டு வந்த வினாத்தாள் முறையால் மாணவர்களை மதிப்பீடு செய்வதில் வேறுபாடு ஏற்படுகிறது.

அதனால் அனைத்து பள்ளி மாணவர்களும் ஒரே மாதிரியான வினாத்தாள்களை பின்பற்றி தேர்வு எழுதினால் ஏற்றத்தாழ்வு ஏற்படாது என்று கருதி மீண்டும் பொதுவான வினாத்தாள் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு உள்ளது.

தேர்வுக்கு முன்னதாக வினாத்தாள் கசிந்தால் சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகள், தொடர்புடைய ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை மெரினா கடற்கரையில், நேற்று முன்தினம் (18.9.2023) சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமம் சார்பில் தயாரிக்கப்பட்ட, சென்னையின் அடுத்த 25 ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த போக்குவரத்து திட்டம் குறித்த கருத்துக்கணிப்பு துண்டு பிரசுரங்களை வழங்கினார். உடன் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழும சிறப்பு அலுவலர் ஐ.ஜெயகுமார், IRTS. சென்னை பெருநகர கூடுதல் காவல் ஆணையர் (போக்குவரத்து) ஆர். சுதாகர், பெருநகர சென்னை மாநகராட்சியின் பணிகள் குழு தலைவர் நே.சிற்றரசு, தேனாம்பேட்டை மண்டல குழு தலைவர் எஸ்.மதன்மோகன் ஆகியோர் உள்ளனர்.

### பொதுமக்களின் பயணமுறை குறித்து

# வீடுவீடாக பொதுமக்களிடம் கருத்துக்கணிப்பு எடுக்கும் பணி!

## துண்டுப் பிரசுரங்கள் வழங்கி - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, செப்.20-

சென்னை மெரினா கடற்கரை, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய அலுவலகம் எதிரில், நேற்று முன்தினம் (18.9.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி முன்னிலையில் சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமம் சார்பில் தயாரிக்கப்பட்ட பொது மக்களின் பயண முறை குறித்த கருத்துக்கணிப்பு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வழங்கி, வீடு வீடாக கருத்துக்கணிப்பு எடுக்கும் பணியினைத் தொடங்கி வைத்தார்.

சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமமானது (Chennai Unified Metropolitan Transport Authority (CUMTA)) முதலமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு செயல்பட்டு வரும் ஒரு குழுமமாகும். இக்குழுமம் ஒருங்கிணைந்த போக்குவரத்துத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. சென்னைப் பெருநகரப் பகுதியின் எதிர்கால போக்குவரத்தை வடிவமைக்க தயாரிக்கப்படும் மக்கள் மற்றும் சரக்குப் போக்குவரத்திற்காக நீண்ட காலத்திற்கான ஒருங்கிணைந்த போக்குவரத்துத் திட்டமாகும்.

மக்களின் பயண நேரத்தையும், செலவையும் குறைக்கும் நம்பகமான மற்றும் வேகமான பொதுப் போக்குவரத்தை வடிவமைக்கவும், பாதுகாப்பான சாலைகளை வடிவமைக்கவும், பொது மக்களின் பயண முறை மற்றும் எதிர்பார்ப்புகளை புரிந்து கொள்ளவும் சிறந்த போக்குவரத்து வலையமைப்பை உருவாக்கவும் மற்றும் அனைவருக்கும் ஏற்ற போக்குவரத்தை திட்டமிடவும் இக்கருத்துக்கணிப்பு உதவியாக இருக்கும்.

எனவே, அடுத்து வரும் 25 ஆண்டு கால சென்னையின் பொதுப் போக்குவரத்தை திட்டமிட இந்த கருத்துக்கணிப்பு நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர். பொ.சங்கர், சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழும சிறப்பு அதிகாரி ஐ.ஜெயகுமார், ஐ.ஆர்.டி.எஸ்., சென்னைப் பெருநகர கூடுதல் காவல் ஆணையர் (போக்குவரத்து) ஆர்.சுதாகர், பெருநகர சென்னை மாநகராட்சியின் பணிகள் குழு தலைவர் நே.சிற்றரசு, தேனாம்பேட்டை மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அண்ணா மட்டும் பிறக்காமல் இருந்திருந்தால்

# அண்ணாமலை ஆடுதான் மேய்த்து கொண்டிருக்க வேண்டும்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை, செப். 20-

சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள அண்ணாகலைஞர் சிலை முன்பு தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் 'சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்பு' நிகழ்ச்சி நடந்தது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எம்.எல்.ஏ.க்கள் மாதவரம் சுதர்சனம், மயிலை த.வேலு, தாயகம் கவி, எழிலன், முன்னாள் எம்.எல்.ஏ. ஆஸ்டின், மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன், மாவட்டச் செயலாளர் சிற்றரசு, தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், அன்பகம் கலை, பகுதிச் செயலாளர் மா.அன்புதுரை, சென்னை மாநகராட்சி கவுன்சிலர் பிரேமா சுரேஷ், இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் நுங்கை சுரேஷ் உள்பட ஏராளமானோர் பங்கேற்று 'சமூக நீதி நாள்' உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.



முன்னதாக அனைவரும் பெரியார் திருவுருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து ஆர்.எஸ். பாரதி அளித்த பேட்டி வருமாறு:-

அண்ணாமலைக்கு அரசியல் தெரியவில்லை. கிராமத்தில் ஒரு பழமொழி சொல்லுவார்கள். கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை.

அதுபோல அண்ணாவின் பெருமை அண்ணாமலைக்கு தெரிவது நியாயம் கிடையாது. அவர் மரியாதையாக பேசுவது இனி மேல் நல்லது. காரணம் தி.மு.க.வும், தமிழ்நாட்டு மக்களும் அண்ணா, பெரியாரைப் பற்றி யார் பேசினாலும் அதை தாங்கிக் கொள்ளவோ, அதைப் பற்றி அனுமதிக்கவோ என்றைக்கும் தயாராக இல்லை. அதை அண்ணாமலை புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் அண்ணா மறைந்த நாள் முதல் அண்ணா என்று தான் எல்லோரும் அழைக்கிறார்கள்.

நேற்று பிறந்த அண்ணாமலை, நேற்று அரசியலுக்கு வந்த அண்ணாமலை அண்ணாதுரை என்று ஆணவமாக அழைக்கிறார். அண்ணாமலைக்கு அழிவு நெருங்கி கொண்டிருக்கிறது. அண்ணாவைப் பற்றி யார் இழிவாக பேசினாலும் அனுமதிக்க மாட்டோம். அண்ணாமலை தவறான புள்ளி விவரங்களை சொல்லிக் கொண்டிருக்கிறார்.

1956ம் ஆண்டு அண்ணா பேசியதாக கூறுகிறார். 1949ல் தி.மு.க.வை துவக்கி தனி பெரும் தமிழ்நாட்டில் பவனி வந்தவர். அண்ணா மட்டும் பிறக்காமல் இருந்திருந்தால் அண்ணாமலை ஆடு தான் மேய்த்துக் கொண்டிருக்க வேண்டும். ஆடு மேய்க்கிற அண்ணாமலையை இன்று ஐ.பி.எஸ். ஆக உயர்ந்திருக்கிறார் என்று சொன்னால் அது அண்ணா போட்ட பிச்சை, பெரியார் போட்ட பிச்சை. அண்ணா இல்லை என்று சொன்னால் அண்ணாமலையின் நிலைமை என்னவாக மாறியிருக்கும்.

அண்ணாமலையின் பாட்டனார் இருந்திருந்தால் அண்ணாவின் பெருமையை சொல்லி இருப்பார். தமிழ்நாடு மக்கள் வெகுண்டு எழுந்தார்கள் என்றால் அண்ணாமலை பணி செய்த கர்நாடகத்திற்கு மிக விரைவில் ஓடிப் போகின்ற நிலைமை வரும்.

இவ்வாறு ஆர்.எஸ். பாரதி பேட்டியளித்தார்.

# கர்நாடகம் தண்ணீர் திறக்க முன்வந்தாலும் பா.ஜ.க. தடுக்கிறது!

## மார்க்சிஸ்ட் கே.பாலகிருஷ்ணன் குற்றச்சாட்டு!



விருத்தாசலம், செப். 20 -

'கர்நாடகம் தண்ணீர் திறக்க முன் வந்தாலும் பா.ஜ.க. தடுக்கிறது' என்று பாலகிருஷ்ணன் குற்றம் சாட்டி உள்ளார்.

விருத்தாசலத்தில் பெரியார் சிலைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் அவர் அளித்த பேட்டி வருமாறு:-

அணையில் தண்ணீர் குறைவாக இருக்கிறது என்ற ஒரு காரணத்தைக் காட்டி தொடர்ந்து கர்நாடகா அரசு தமிழ்நாட்டுக்கு தர மறுத்து வருவது நியாயம் இல்லை. அணைகள் நிரம்பி உபரி வந்தால் தான் தமிழ்நாட்டுக்கு தண்ணீர் கொடுப்போம் என்கிற நிலையை கடைப்பிடிப்பது எந்த விதத்திலும் சரியல்ல. ஒருவேளை காங்கிரஸ் அரசு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்ற ஒரு மன நிலைக்கு வந்தால் அங்கு உள்ள பா.ஜ.க. திறக்கவே கூடாது. தமிழ்நாட்டிற்கு தண்ணீர் கொடுக்கவே கூடாது என்று போராடுகிறது.

அவர்களுக்கு அடிபணிந்து கர்நாடக அரசாங்கம் தமிழகத்தை வஞ்சிப்பது நியாயம் இல்லை. அவசரமாக காவிரி மேம்பாட்டு ஆணையத்தின் கூட்டத்தை கூட்டி உள்ளார்கள். 21ம் தேதி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வரவுள்ளது. எனவே நீதிமன்றம் சொல்லி தான் தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று இல்லாமல் தமிழ்நாட்டில் காய்ந்து கொண்டிருக்கிற நெல் சாகுபடியை காப்பாற்ற கர்நாடகா, தண்ணீரை திறந்து விட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.



சென்னை – அண்ணா அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் சிலைகள் முன்பு தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் செப்.17 – தந்தை பெரியார் பிறந்த நாளன்று, 'சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்பு' நிகழ்ச்சி நடந்தது. இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழகத் துணை அமைப்புச் செயலாளர்கள் ஆஸ்டின், தாயகம் கவி, தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், மாவட்டச் செயலாளர்கள் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ., நே.சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், மகளிர் அணி தலைவர் விஜயா தாயன்பன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.